தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய அளவிலான ECOFEST'15 கருத்தரங்கு

தற்போது பேராற்றல் வாய்ந்த sustainability-கான ஒரு பாய்ச்சலானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இளநிலை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் துறை மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 16 உலக ஓசோன் தினத்தன்று மாணவர்கள் "ECO FEST'15-Envisioning Feasibility" என்ற மாபெரும் 9-வது தேசிய அளவிளான கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இக்கருத்தரங்கு வெவ்வேறு துறை சார்ந்த மாணவர்கள் தங்களது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவினை பெருக்கிக் கொள்வதற்கான ஒரு மேடையினை ஏற்படுத்திக் கொடுப்பதையும், தற்போதைய ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் உள்ள இடர்பாடுகளை முன்னிறுத்துவது தொடர்பான மாணவர்களது திறமைகளையும், புத்தாக்கப் படைப்புகளையும் பயன்படுத்திக் கொள்வதையும் முதன்மை குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்பட உள்ளது.

மேலும் இக்கருத்தரங்கில் ஆராய்ச்சியின் ஓரல் பிரசன்டேஷன் (Oral presentation) / போஸ்டர் மற்றும் மாடல் பிரசன்டேஷன் (Poster & Model presentation)/ கிரீன் டிபேட் (Green Debate) / கோட் வார் (Code war) / டிசைனிங் (Designing) / பிராப்லமேட்டிக் க்விஸ் (Problematic Quiz) / பிக்செலேட் (Pixelate) மற்றும் ஐடியல் ஐடியா (Ideal Idea) போன்ற போட்டிகள் மாணவர்களை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழலில் ஒரு சிறந்த விழிப்புணர்வு கொண்டவராக உருவாக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிகழ்வானது, விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும், அன்னை பூமியை காப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஒரு மாதத்திற்கான முழுநீள விழாவாக ஆகஸ்ட் 16 முதல் செப்டம்பர் 16 வரை திட்டமிடப்பட்டுள்ளது.

Ecofest'15-கான பல்வேறு முன்னோட்ட நிகழ்வுகள், ஆற்றல் பாதுகாப்பு மற்றும் தற்போதைய சுற்றுச்சூழல் துறைகளில் உள்ள இடர்பாடுகள் சம்பந்தப்பட்ட விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படவுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் Eco Club ஆரம்பித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாடு, டிஜிட்டல் வரைபடம் பொருத்துதல் ஆகியன முன்னோட்ட நிகழ்வுகளாக திட்டமிடப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, கோவை மாவட்ட அத்லடிக்ஸ் அசோசியேஷனுடன் இணைந்து முதல் வேளாண் தொடர் ஓட்டம் கோயம்புத்தூரில் ஆகஸ்ட் 23, 2015 அன்று நடத்தப்படவுள்ளது. அடுத்த நிகழ்வு பொதுமக்களிடம் மற்றும் வளாகத்தை சுற்றியுள்ள அங்காடிகளுக்கு மின் சேமிப்புமிக்க மின்விளக்குகள் மற்றும் துணிப்பைகளை அளிப்பதுமாகும். இறுதியாக, மலரும் (பொறியாளர்களை) பள்ளி மாணவ மாணவிகளை ஈடுபடுத்தி GREEN BRAINS'15 என்ற தலைப்பில் பல்வேறு போட்டிகள் செப்டம்பர் 6 அன்று நடத்தப்படவுள்ளன. இதில் ஜங்க் ஆர்ட் (Junk Art)/ டிராயிங் & பெயின்டிங் கன்டெஸ்ட் (Drawing & Painting contest)/ மாடல் பிரசென்டேசன் (Model presentation) மற்றும் வினாடி வினா (Junior Engineer Quiz competition) ஆகியன அடக்கம். இது வளரும் பசுமை பொறியாளர்கள் தங்களது திறமைகளை வெளிக்கொணரவும், மேலும் வளர்த்துக் கொள்ளவும் ஒருபலத்த அடித்தளத்தை அமைக்க இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்